පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

தரம் 9

**இரண்டாம் தவணைப் பரீட்சை - 2023**
**இஸ்லாம்**

பாடசாலையின் பெயர் : ..........................................................................................

மாணவர் பெயர்/ சுட்டெண் : ...............................................................
............................................................................... நேரம் : **2** மணித்தியாலம்

# விடைகள்

## பகுதி - I

**(01)**

| | | | |
|---|---|---|---|
| 01) 2 | 06) 2 | 11) 1 | 16) 4 |
| 02) 4 | 07) 4 | 12) 3 | 17) 1 |
| 03) 1 | 08) 3 | 13) 2 | 18) 3 |
| 04) 3 | 09) 2 | 14) 3 | 19) 3 |
| 05) 2 | 10) 2 | 15) 4 | 20) 4 |

**(1x20 =20 புள்ளிகள்)**

**02)** 21. ஷபாஅத் 22. மஹர் 23. வறுமை 24. தலைமுடி களைதல் 25. இ.ஃதிகாப்

**(2x5 =10 புள்ளிகள்)**

**03)**

| | | | |
|---|---|---|---|
| 26. **X** | 27. **X** | 28. √ | 29. √ |
| 30. √ | 31. **X** | 32. √ | 33. **X** |
| 34. **X** | 35. **X** | | |

**(1x10 =10 புள்ளிகள்)**

## பகுதி II

**(01) சுருக்கமான விடை தருக**

01. முடியை சிரைத்தல் அல்லது கத்தரித்தல், நகம் வெட்டுதல், ஆண்கள் தமது தலையை மறைத்தல், ஆண்கள் தைத்த ஆடைகளை அணிதல், நறுமணம் பூசுதல், தரையில் வாழும் மிருகங்களை வேட்டையாடுதல், திருமணம் முடித்தல், தாம்பத்திய உறவில் ஈடுபடல். *(ஏதேனும் இரண்டு)*
02. *99 திருநாமங்களில் எதேனும் இரு பெயர்கள் பொருளுடன் தரப்பட்டிருப்பின் புள்ளி வழங்கவும் (பார்க்க : பாடநூல் பக்கம் : 4)*
03. மிகச் சுத்தமான நீரைப் பயன்படுத்தல், நீர் படுவதைத் தடுக்கக்கூடிய பொருட்கள் உடம்பில் இல்லாதிருத்தல்
04. 30 மாடுகள், 40 ஆடுகள்
05. ஹஜ், உம்றாவின் போது இஹ்ராம் நிய்யத் வைக்கும் இடம் மீக்காத் ஆகும். இலங்கையர்களுக்கான மீக்காத் யலம்லம்.
06. “சரியான முறையில் ஹஜ்ஜை நிறைவேற்றியவர் அன்று பிறந்த பாலகன் போல் மீள்கிறார்” (புகாரி)
07. நபி (ஸல்) அவர்கள் மீதான அன்பு.
08. க.ஃபாவை தவாப் செய்தல் / தவாபுல் குதூம்
09. அல்லாஹ் என்ற திருநாமம்
10. யவ்முல் ப.ஃ.ஸ், யவ்முல் ஹிஸாப்

**(2x10 =20 புள்ளிகள்)**

**(02)**

1. மனனமிடல், எழுதி வைத்தல்.

2. வணக்கங்களை நிறைவேற்றுதல், தஹிய்யத்துல் மஸ்ஜித் தொழுதல், தூய்மை பேணல், மஸ்ஜிதில் அமைதி பேணல், மஸ்ஜிதுக்குள் நுழையும் போதும் வெளியேறும் போதும் துஆ ஓதுதல், மஸ்ஜிதை தூய்மையாகவும் அழகாகவும் நேர்த்தியாகவும் வைத்திருத்தல், மஸ்ஜிதுடன் நெருக்கமான உறவைப் பேணுதல் *(ஏதேனும் நான்கு)*

3. நேரம் ஓர் அமானிதம். அது குறித்து நாம் மறுமையில் விசாரிக்கப்படுவோம் என்பதை நினைவில் கொள்ளல், நேரம் குறைவாகவும் கடமைகள் அதிகமாகவும் உள்ளன என்பதை உணர்ந்து செயற்படுதல், தொழுகை முதலான அமல்களை உரிய நேரத்தில் நிறைவேற்றுதல், திலாவத்துல் குர்ஆன், திக்ர், காலை மாலை அவ்ராதுகள் முதலானவற்றை தொடராக ஓதிவருதல், அன்றாடம் நிறைவேற்ற வேண்டிய செயல்களைத் திட்டமிட்டுக் கொள்ளல், தினமும் நிறைவேற்றிய செயல்கள் குறித்து ஒவ்வொரு நாள் முடிவிலும் சுயவிசாரணை செய்துகொள்ளல், கற்றல் நடவடிக்கைகளைத் தினமும் திட்டமிட்டு நிறைவேற்றுதல், ஓய்வு நேரங்களைப் பயனுள்ள வழிகளில் செலவிடுதல், பிரயோசனமற்றவற்றிலிருந்து விலகி நடத்தல், சோம்பலை அகற்றி உற்சாகத்தை ஏற்படுத்திக் கொள்ளல். *(இவை போன்ற பொருத்தமான விடைகள் இருப்பின்)*

**(2+4+4 =10 புள்ளிகள்)**

**(03)**

1. அல்குர்ஆனின் மூலம் முஸ்லிம்களை ஒன்றுபடுத்தியவர் - உஸ்மான் (ரழி)

2. தஹஜ்ஜுத் நேரம், வெள்ளிக் கிழமை தினம், அரபாவுடைய நாள், ரமழான் மாதம்

3. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இறைவனிடமிருந்து வந்து கொண்டிருந்த வஹி சில காலங்கள் தாமதமாகியது. ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடனான தொடர்பும் துண்டிக்கப்பட்டது. இதனை அறிந்துகொண்ட முஷ்ரிக்குகள் எள்ளிநகையாடினர். முஹம்மதை அவருடைய இறைவன் கைவிட்டுவிட்டான். அவரிடம் வந்து சென்ற ஷைத்தானின் வருகையும் முற்றுப்பெற்றுவிட்டது. இவ்வாறு கேலி செய்தவர்களுள் அபுலஹபின் மனைவி அல் அவ்ரா பின்த் ஹர்ப் குறிப்பிடத்தக்கவளாவாள். எதிரிகளின் விமர்சனங்கள், கேலிப்பேச்சுக்கள் என்பவற்றால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மனச்சோர்வுற்றிருந்த சந்தர்ப்பத்திலேயே இந்த ஸூரா அருளப்பட்டது.

**(2+4+4 =10 புள்ளிகள்)**

**(04)**

1. நல்லடியார்களை இறைவன் கைவிடமாட்டான் அவர்களுக்கு எப்போதும் இறைநேசமும் பாசமும் கிடைத்துக்கொண்டேயிருக்கும் என்ற நம்பிக்கை ஊற்றை உள்ளங்களில் ஆழப் பதியச் செய்கிறது.

   இவ்வுலகிலும் மறு உலகிலும் இறைவன் நல்லதையே தருவான். இங்கிருப்பதை விட அங்கிருப்பவை மிகவும் மேலானவை என்று கூறுவதன் மூலம் மறுமை வாழ்வில் ஆசையைத் தூண்டுகிறது.
   அனாதைகளைக் கவனிக்க வேண்டும். அவர்களுக்கு புகலிடம் அளிக்க வேண்டும், யாசிப்பவர்களுக்கு கொடுத்து உதவ வேண்டும். ஒருபோதும் அவர்களை இழிவுபடுத்தவோ இம்சைப்படுத்தவோ கூடாது முதலான போதனைகளைக் கற்றுத் தருகிறது.
   இறைவன் தந்த பேரருள்களை எடுத்துரைப்பதும் அவற்றுக்காக இறைவனுக்கு நன்றிக் கடனை முழுமையாக செலுத்துவதும் அவசியம் என்பதை உணர்த்துகிறது.
   (*போன்ற ஏதேனும் இரண்டு குறிப்பிடப்பட்டிருப்பின் புள்ளி வழங்கவும்.)*

2. குளித்தல், நேரகாலத்தோடு பள்ளிக்கு சமூகமளித்தல், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது அதிகம் ஸலவாத்துக் கூறல், பிரார்த்தனையில் ஈடுபடல். (*போன்ற ஏதேனும் மூன்று குறிப்பிடப்பட்டிருப்பின் புள்ளி வழங்கவும்.)*

3. *பாடநூல் பக்கங்கள் 82,83ஐ பார்க்கவும்.*

**(2+4+4 =10 புள்ளிகள்)**

**(05)**

1. *பாடநூல் பக்கம் 79ஐ பார்க்கவும்.*

2. சமத்துவம், சகோதரத்துவம், ஒற்றுமை, விட்டுக்கொடுத்தல், சகித்துக்கொள்ளல், கூட்டுவாழ்வு (*போன்ற ஏதேனும் நான்கு குறிப்பிடப்பட்டிருப்பின் புள்ளி வழங்கவும்.)*

3. அல்லாஹ் அளித்தவற்றில் திருப்தி கண்டு வாழ அது வழிநடத்தும்.
   ஆக்க வேலைகளில் ஈடுபடுவதற்கு அது தூண்டல் செய்யும்.
   அபாயகரமான சந்தர்ப்பங்களில் துணிச்சலோடு செயல்பட தூண்டுதலாக அமையும்.
   தீமைகளை எதிர்ப்பதில் உறுதியாக இருக்கச் செய்யும்.
   துன்பங்கள், துயரங்களின்போது பொறுமையைக் கைக்கொள்ளச் செய்யும்.

**(2+4+4 =10 புள்ளிகள்)**

**(06)**

1. 1. **இப்றாத்:** இது ஹஜ்ஜை மட்டும் நிறைவேற்றும் முறையாகும்.
   2. **அத்தமத்துஉ:** இது உம்றாவை செய்து விட்டு இஹ்ராம் களைந்து மீண்டும் ஹஜ்ஜுக்குத் தனியாக இஹ்ராம் தரித்து (இரண்டையும் சேர்த்து) செய்யும் முறையாகும்.
   3. **அல் கிறான்:** இது ஹஜ்ஜையும் உம்ராவையும் சேர்த்து ஊரே இஹ்ராமில் செய்வதாகும்.

2. 1. தங்கம், வெள்ளி, பணம்
   2. தானியங்கள் (கோதுமை, நெல் போன்றன)
   3. கால்நடைகள் (ஆடு,மாடு,ஒட்டகம்)
   4. பழவகைகள் (பேரீச்சை, திராட்சை)
   5. வியாபாரப் பொருட்கள்

3. *பாடநூல் அலகு 18 பக்கம் 72-77ஐ பார்க்கவும்.*

**(2+4+4 =10 புள்ளிகள்)**

**(07)**

1. உனது வாலிபத்தை எவ்வாறு கழித்தாய்? அறிவை எவ்வாறு பயன்படுத்தினாய்? செல்வத்தை எவ்வாறு சம்பாதித்து, எவ்வாறு செலவழித்தாய்? வாழ்நாளை எவ்வாறு பயன்படுத்தினாய்? என்ற நான்கு விடயங்கள்

2. *பாடநூல் பக்கம் 56ஐ பார்க்கவும்.*

3. வறியவர்கள், ஏழைகள், ஸகாத்தை வசூல் செய்யும் ஊழியர்கள், புதிதாக இஸ்லாத்தைத் தழுவியவர்கள், உரிமை சீட்டு எழுதப்பட்ட அடிமைகள், கடனில் மூழ்கியவர்கள், அல்லாஹ்வின் பாதையில் போர் புரிவோர், வழிப்போக்கர்கள்

**(2+4+4 =10 புள்ளிகள்)**